REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2020 நவம்பர் 5 வியாழக்கிழமை
THINAKARAN தினகரன்




வரு. 88 இல. 263 | November 05, Thursday, 2020 | 16பக்கங்கள் | 30/-

சவூதி அரேபியாவில் பாதுகாப்புத் தேடி தங்கியுள்ள இலங்கையரை

# 48 மணி நேரத்துக்குள் அழைத்துவர உத்தரவு



### கொரோனா சிறப்பு பணிக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி பணிப்பு

சவூதி அரேபியாவில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை 48 மணித்தியாலங்களுக்குள் அழைத்து வர ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய நடைபெற்ற சிறப்பு பணிக்குழுவின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கொவிட் 19 வைரஸை கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவ தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலினால், சவூதி அரேபியாவில் உள்ள இலங்கையர்கள் வதிவிட மற்றும் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளதுடன்,

06



கொவிட் 19 நிதியத்திற்கு கிடைக்கப்பெற்ற நன்கொடைகளுக்கான காசோலைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.



## கிளிநொச்சி மக்களை பாதுகாக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

03

# ஊரடங்கு சட்டத்தை மீறிய 2,200 பேர் இதுவரை கைது

முகக் கவசம் அணியாவிடினும் நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறிய 2,200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு முகக் கவசம் அணியாமை, சமூக இடைவெளியை அலட்சியம் செய்கின்றவர்கள் தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண நேற்று அவ்வாறு 75 பேரை கைது செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா

06



பாராளுமன்ற பேரவை … கடற்றொழில் அமைச்ச … திர்க்கட்சித் தலைவர், … கொண்டிருந்தனர்.




# பொரளை பொலிஸில் 41 பேருக்கு கொரோனா

STF முகாம்கள் 3க்கும் மூடுவிழா

**லோரன்ஸ் செல்வநாயகம்**






பொரளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 41 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் அனைவரும் களுத்துறை பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் பொரளை பொலிஸ் நிலையம் பொதுமக்கள் சேவைக்காக மூடப்பட்டுள்ளதாகவும் மக்கள்

06

# கொரோனா வைரஸ் பரவல் அபாய நிலையில் உள்ளது

சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ஹேரத்



கொரோனாவின் இரண்டாம் அலையை கட்டுப்படுத்துவதற்கு, இரண்டு மாதத்திற்கும் அதிக காலம் எடுக்கும் என சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாட்டில் கொரோனா வைரஸ் பரவலானது, ஓரளவு அபாயநிலையில் உள்ளதாக சுகாதார

06

# [illegible]

ஜனாதிபதி அறிவுறுத்தல் என்கிறார் இராணுவத் தளபதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய இலக்கு வைக்கப்படும் குழுக்களுக்கு ஒரே நாளில் PCR பரிசோதனைமுடிக்கப்பட வேண்டுமென இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.



சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் தகவல்படி மொத்தமாக 10,655 PCR பரிசோதனைகள் நேற்று இலங்கையில் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை கொவிட் 19 பாதிப்புற்ற 545,043 நபர்களுக்கு

06

# இலங்கை சிறையிலிருந்த 43 பாகிஸ்தான் போதைப்பொருள் குற்றவாளிகள் நாடுகடத்தல்

சிறப்பு விமானம் மூலம் நேற்று இஸ்லாமாபாத்துக்கு அனுப்பி வைப்பு

போதைப்பொருள் குற்றச்சாட்டுக்காக இலங்கையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 43 பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கைதிகள் சிறப்பு விமானம் மூலம் பண்டாரநாயக்க, சர்வதேச விமான நிலையத்திலிருந்து இஸ்லாமாபாத்துக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மேல்

06





எதிர்க்கட்சித் தலைவர் முஸ்லிம்களுக்காக பாராளுமன்றத்தில் என்னமா குரல் கொடுத்தார் பார்த்தீங்களா .....?

வடிவா பார்த்தேன், 9 உடல்கள் எரிந்து விட்டது எட்டு மாதமா கோமாவில இருந்தவர் மாதிரி இப்பதான் குரல்

# கொரோனா வைரஸ் நோயாளிகள் 12,018 ஆக அதிகரிப்பு: மரணம் 24

78 வயதுடைய கொட்டாஞ்சேனை நபரே நேற்று உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தொற்று 24ஆவது நோயாளி நேற்று உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதுடைய

அதற்கிணங்க இதுவரை கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை நேற்று 12,018ஆக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் மேலும் 277 வைரஸ் தொற்று நோயாளிகள்

# மன்னாரில் கிராம அலுவலர் மர்மமான முறையில் உயிரிழப்பு

தலை, உடற்பாகங்களில் காயம்; பொலிஸார் விசாரணை



**தலைமன்னார் விஷேட நிருபர்**

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய கிராம அலுவலகர் ஒருவர் கடமை முடிந்து தனது வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த நிலையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ் சம்பவம் செவ்வாய்

06